செ.வெ.எண். 503 /2017/செ.ம.தொ. நாள். 11 .10.2017

## கிராம நலன் மற்றும் தூய்மைக்கான இரண்டு வார விழாவினை முன்னிட்டு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்

கிராம நலன் மற்றும் தூய்மைக்கான இரண்டு வார விழாவினை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தால் வேலைவாய்ப்பு முகாம் 14.10.2017 அன்று காலை 10.00 மணி முதல் மேல்மருவத்தூர், ஆதிபராசக்தி பொறியில் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட உள்ளது.

இந்த வேலைவாய்ப்பு முகாமில், எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, மேல்நிலைக் கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் பட்ட படிப்பு முடித்த 18 வயது முதல் 30 வயது வரையுள்ள ஆண், பெண் இருபாலரும் கலந்துகொண்டு வேலை வாய்ப்பு பெறலாம்.

இம்முகாமில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் பல்வேறு முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்துகொள்ள இருக்கிறார்கள்.

எனவே, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பு முகாமிற்கு கல்வித்தகுதி, குடும்ப அட்டை, ஆதார் அட்டை மற்றும் புகைப்படம் சான்றிதழ்களின் அசல் மற்றும் நகலுடன் தவறாது கலந்து கொண்டு நல்ல ஊதிய விகிதத்தில் வேலைவாய்ப்பினை பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.